[1978 செப்டம்பர் 9

புதிய விமானதளங்கள்.

*வினா எண். 117—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் விமான நிலையம் அமைத்திடக் கோரி தமிழக அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

*வினா எண். 118— திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அல்லது அதன் வெகு அருகில் விமான நிலையம் அமைக்கக் கோரி மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

கொடைக்கானலில் உள்ள அரசுப் பேருந்துப் பணிமனை.

*வினா எண். 119— திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் நகரில் கட்டப்பட்ட State Bus Depot உபயோகமில்லாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) கொடைக்கானல் நகரில் அரசுப் பேருந்துப் பணிமனை இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.